நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 20/2021
அரசு தரப்புக்காக அ. சா.6 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Dr.அனிதா | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W.10 | | | |

1 முதல் 4 எதிரிகள் ஆஜரில் இல்லை. மனு தாக்கல் அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2026.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.24 )

நான் தற்போது கடலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மயக்கவியல் பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.01.2020 ஆம் தேதி இரவு 11.00 மணி அளவில் காட்டுமன்னார்கோவில் அரசு மருத்தவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது உஷா க/பெ. வீரமணி, 28 வயது மதிக்கத்தக்க பெண்மணியை அவருடைய தந்தை கதிரேசன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரின் அங்க மச்ச அடையாளங்களை சரிபார்க்கப்பட்டு அவரை பரிசோதித்ததில் அவர் தன்னை தெரிந்த நபர் மர கழியால் தனது வீட்டில் இரவு 8.30 மணி அளவில் தன்னை தாக்கியதாக

கூறினார். மேலும் அவரை பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவுடம் இருந்தார். அவரது இடது கையில் மேல் பகுதியில் மனிதர் கடித்த காயம் காணப்பட்டது. அவருக்கு வெளிநோயளியாக சிகிச்சை அளித்து மயக்கம் காரணமாக மேல் சிகிச்சைக்காக ராஜா முத்தையா மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். மேலும் அவரின் ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று சான்று வழங்கினேன். (அந்த உஷா என்பவரின் விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது)

அன்றைய தினமே இரவு 11.10 மணி அளவில் சந்திரா க/பெ.அமிர்தலிங்கம் என்ற 65 வயது மதிப்புள்ள பெண்மணியை அவரது மகன் செல்வம் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரின் அங்கமச்ச அடையாளங்களை சரிபார்த்து அவரை பரிசோதனை செய்ததில் அவரை தெரிந்த நபர் அவரது வீட்டில் 28.01.2020 அன்று இரவு 8.30 மணி அளவில் அடையாளம் தெரியாத ஆயுதத்தால் தாக்கக்கப்பட்டதாக உடன் வந்த செல்வம் என்பவர் கூறினார். மேலும் அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுயநினைவு இல்லாமல் இருந்தார்.

1.அவருக்கு இடது பக்க மண்டையில் 10x8 cm அளவுள்ள கன்றிய காயம் காணப்பட்டது.

2.வெட்டுக்காயம் 15 cm இடது காதின் பின்புறத்திலிருந்து பின் மண்டைவரை இருந்தது. அவருக்கு முதல் உதவி அளித்து மேல் சிகிச்சைக்காக ராஜா முத்தையா மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். மேலும் அவரின் ஏற்பட்ட காயம் கொடுங்கயம் காயம் என்று சான்று வழங்கினேன். (அந்த சந்திரா என்பவரின் விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை

விசாரித்தார்கள்.

<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எத்தனை பற்கள் பதிந்திருந்தது என்ற விவரத்தை அ.த.சா.ஆ.5 விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சந்திரா என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் கீழே விழுவதால் ஏற்படுமா என்றால் வாய்புள்ளது.

**நீதிமன்ற கேள்வி–** 15 நீளம் உள்ள காதின் பின்புறத்திலிருந்து பின் மண்டையில் உள்ள காயம் ஒரு நபர் கீழே விழுந்தால் ஏற்படுமா?

**பதில்–** ஏற்படலாம்

<u>குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>–

சந்திரா என்ற நபருக்கு ஆண்டிபயாட்டிக் மருந்துகள் கொடுக்கபடவில்லை என்று சொன்னால் சரிதான்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 11.42)

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.